# ஈஸியா செய்யுங்க... வீட்டை அழகாக்குங்க...

## புடவை பெயிண்டிங்



பூமாதேவி

**இந்த வாரம் நாம் கற்றுக் கொள்ளப் போவது புடவை, சுடிதாரில் பெயிண்டிங் செய்ய. இதை நமக்கு சொல்லிக் கொடுக்கப் போகிறவர் பூமாதேவி.**

**தேவையான பொருட்கள் :**

புடவை: 1

பேப்ரிக் பெயிண்ட் மெட்டாலிக் கலர்: தேவைக்கு

5 நம்பர் பிரஷ்: 1

தண்ணீர்: தேவைக்கு

**செய்முறை:**

எடுத்துக் கொண்ட புடவையில் சுருக்கம் இல்லாமல் இருக்க வேண்டும். பிறகு நமக்கு வேண்டிய டிசைனை மெட்டாலிக் பெயிண்ட்டால் வரையவும்.

வரையும் போது பெயிண்டுடன் ஒரு சில துளிகள் தண்ணீர் சேர்த்துக் கொண்டு பிரஷால் மெதுவாக வரையவும்.





**இதை செய்யும்போது கவனிக்க வேண்டியவை :**

★ பெயிண்ட் செய்வதற்கு எல்லா வகை துணிகளும் சிறந்தது. அனைத்து வகை துணிகளிலும் போடமுடியும். அதை பராமரிப்பதைப் பொறுத்தே பெயிண்ட் உதிராமல் இருக்கும்.

★ எடுத்துக் கொண்ட புடவையோ, சுடிதாரோ சுருக்கம் இல்லாமல் இருக்க வேண்டியது மிக முக்கியம். அப்போதுதான் பெயிண்ட்டால் வரையும் போது எல்லா இடத்திற்கும் சமமாக பரவும்.

★ வரையும் போது துணிக்கு அடியில் நியூஸ் பேப்பர் வைத்து வரையக் கூடாது. தரையில், டேபிளில் வைத்து வரையலாம். இல்லாவிட்டால் கசங்காத பிளாஸ்டிக் பேப்பரை வைத்து வரையலாம்.

★ துணிகளில் வரைந்த பிறகு ஒரு நாள் முழுதும் நிழலில் காயவிட்டு, திருப்பி அயர்ன் பண்ணவேண்டும். உடனே அயர்ன் பண்ணும்போது பெயிண்ட் உருகி துணியில் பரவிவிடும். 3 நாள் கழித்து துவைக்கலாம்.

★ மார்பிள் தரையில் புடவையை விரித்து பெயிண்ட் பண்ணக் கூடாது. அப்படி செய்யும்போது மார்பிளில் பெயிண்ட் பதிந்துவிடும். கழுவினாலும் போகாது. டல்சில் பண்ணும்போது ஒட்டிக்கொள்ளும்.

★ இப்படி பெயிண்ட் செய்த புடவையில் நமக்கு பிடித்த ஜர்தோஷி, மணி, குந்தன் வேலைபாடு செய்யும்போது மிக அழகாக இருக்கும்.



